## நாம் பின்பற்றும் அரசியல் அமைப்பு முறை இன்று பல அய்யப்பாடுகளை எதிர்கொண்டு வருகிறது!

## தமிழ்நாட்டில் உன்னதத் தலைவர்களின் கொள்கைகளை உயிர் மூச்சாகக் கொண்டு

# ‘திராவிட மாடல்’ ஆட்சியை வெற்றிகரமாக நடத்தி வருகிறார் எங்கள் முதல்வர்!

### பாட்னாவில் நடந்த கருத்தரங்கில் – சட்டப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி உரை!

பாட்னா, ஜன. 24-

**பாட்னாவில் நடைபெற்ற 85வது அனைத்திந்திய சட்டப் பேரவைத் தலைவர்கள் கூட்டத்தில் தமிழ்நாடு சட்டப் பேரவை துணைத் தலைவர் கு. பிச்சாண்டி பேசும்போது நாம் பின்பற்றும் அரசியல் அமைப்பு முறை இன்று பல அய்யப்பாடுகளை ஏற்படுத்துகிறது என்றும் தமிழ்நாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘திராவிட மாடல்’ ஆட்சியில் உன்னதத் தலைவர்களின் கொள்கைகளை உயிர் மூச்சாகக் கொண்டு செயல்பட்டு வருகிறார் என பெருமிதம் பொங்க கூறினார்.**

**சட்டப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி ஆற்றிய உரை வருமாறு:-**

“அரசமைப்பின் 75-ஆவது ஆண்டு விழா: அரசமைப்பு மாண்புகளை வலுப்படுத்துவதில் நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்ட மன்ற அமைப்பு களின் பங்களிப்பு..”

பெருமதிப்புமிக்க இந்த அவையில் அரசமைப்புச் சட்டத்தின் 75-ஆவது ஆண்டு விழா:: அரசமைப்பு மாண்புகளை வலுப்படுத்துவதில் நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்ற அமைப்புகளின் பங்களிப்பு” என்ற தலைப்பில் உங்கள் முன் நின்று உரையாற்றுவதற்கான வாய்ப்புக் கிடைக்கப்பெற்றதை எண்ணி நான் பேருவகையும் பெருமிதமும் அடைகிறேன்.

முதற்கண், சிறப்புமிகு இக்கூட்டத்தில் உங்களுடன் என்னை இணைத்துக் கொள்வதற்கும் உரையாற்றுவதற்கும் வாய்ப்பளித்த எங்களின் முதலமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு சட்டமன்றப்பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரங்கத்தில் எனது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு தலைவர் அவர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது இந்திய அரசமைப்பு 106 சட்டதிருத்தங்களுடன் 75ஆண்டுகள் நீண்ட காலத்தைக் கடந்து வந்துள்ளதை நாம் அனைவரும் அறிவோம். அண்மையில் நமது நாடாளுமன்றத்திலும் மாநிலங்களிலும் நமது அரசமைப்புச் சட்டத்தின் 75ஆவது ஆண்டு விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இருப்பினும், நமது அரசமைப்பை உருவாக்கிய தலைவர்கள் வரையறுத்த மக்களாட்சி மாண்புகள் நாளுக்கு நாள் சீர்கேடடைந்து வருவதால், அவற்றை வலுப்படுத்துவதற்கான முறைகள் குறித்து நாம் சிந்திக்க வேண்டிய அவசியம் தற்போது உருவாகியுள்ளது என்று நான் கருதுகிறேன்.

நமது அரசமைப்புச் சட்டம் 26.11.1949 அன்று இந்திய அரசியல் நிர்ணய சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 26.01.1950 அன்று நடைமுறைக்கு வந்தது.

1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்திற்கு மாற்றாக, நமது அரசமைப்புச் சட்டம், நாட்டின் அடிப்படை செயலாட்சி ஆவணமாகத் திகழ்கிறது. மேலும், இந்திய மேலாட்சி அரசுமுறை (Dominion of India) இந்தியக் குடியரசாக மாறியது. இந்தியாவின் முதல் பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள், அரசியல் நிர்ணய சபையின் நோக்கங்கள் மற்றும் பொருண்மைகள் குறித்து உரையாற்றும்போது கூறியவற்றில் சிலவற்றை இங்கு குறிப்பிடுவது அவசியமென நான் கருதுகிறேன்.

**அடிப்படை சட்டம்!**

“பட்டினியால் வாடும் ஆடையில்லாதோருக்கு மக்களுக்கு உணவளிப்பதற்கும், ஆடைகளை வழங்குவதற்கும், ஒவ்வொரு இந்தியனும் திறமைக்கேற்ப தன்னை மேம்படுத்திக்கொள்வதற்கான முழு வாய்ப்பை வழங்குவதற்கும் ஒரு புதிய அரசமைப்பு வாயிலாக இந்தியாவை விடுதலைப் பெறச் செய்வதே அரசியல் நிர்ணய சபையின் தலையாய கடமையாகும். நாடு முழுவதும் இத்தகைய பிரச்சினைகளை நாம் எதிர்கொள்கிறோம். இப்பிரச்சினைகளுக்கு நம்மால் விரைவில் தீர்வு காண இயல வில்லையெனில், நமது அரசமைப்புச் சட்டத்தின் நோக்கங்கள்அனைத்தும் பயனற்றதாகிவிடும்”.

இந்திய அரசமைப்பு என்பது மாநிலத்தின் ஆட்சிமுறை கட்டமைப்பை வரையறுப்பதற்கும், மாநிலத்தின் வெவ்வேறு நிறுவனங்கள் மற்றும் பகுதிகள், சட்டமன்றம், செயலாட்சி மற்றும் நீதித்துறை, மத்திய, வட்டார மற்றும் உள்ளாட்சி அமைப்பு களுக்கிடையேயான உறவுகளை தீர்மானிப்பதற்குமான அடிப்படை சட்டமாகும்.

பலவகை ஆட்சி முறைகளில் முக்கியமானதாக இரண்டை குறிப்பிடலாம். ஒன்று குடியரசு தலைவர் ஆட்சிமுறை. இந்த ஆட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்படும் குடியரசு தலைவர் நிலையான தலைமை நிர்வாகியாக இருப்பார். ஆனால், அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு பெரிய அளவில் பொறுப்பானவர் அல்ல. மற்றொன்று நிர்வாக தலைவராக பிரதமர் பொறுப்பேற்று வரும் நாடாளுமன்ற ஆட்சி. இந்த முறை ஆட்சியில் பிரதமர் நிலையானவராக இருப்பதை காட்டிலும் நாடாளுமன்றத்தில் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளுக்கு மிகவும் பொறுப்பானவர் ஆவார். இந்திய அரசியல் நிர்ணய சபை ஐக்கிய பேரரசில் (UK) பின்பற்றப்படும் நாடாளுமன்ற ஆட்சி முறையை பின்பற்றுவதற்கு முடிவு செய்தது. இந்த ஆட்சி முறையில் நிர்வாக தலைவர் அதாவது பிரதமர் நாளும், மக்களுக்கு கடமையாற்றும் பொறுப்பை கொண்டவராவார்.

**மாமேதை அம்பேத்கரின் சட்ட முகப்புரை!**

டாக்டர். பாபாசாகேப் அம்பேத்கர் உருவாக்கிய அரசமைப்பின் முகப்புரை, இந்திய அரசியல் நிர்ணய சபையில் விவாதிக்கப்பட்ட நோக்கங்களையும் பொருண்மைகளையும் மிகத் தெளிவாக வரையறுக்கிறது. இந்த முகப்புரை எடுத்துரைப்பவை பின்வருமாறு,

இந்திய மக்களாகிய நாம், இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்,

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,

எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,

சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை.

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை

ஆகியவற்றை எய்திடச் செய்யவும்,

அவர்கள் அனைவரிடையேயும்

தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,

ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்

உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

எனவே, நமது அரசமைப்பில் பொதிந்துள்ள மாண்புகளுக்கிணங்க, நாடாளுமன்றத்திலும் மாநில/யூனியன் சட்டமன்றங்களிலும், சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். அரசமைப்பின் புனிதத்தன்மைக்கு மதிப்பளிக்கும் அதே வேளையில், சூழ்நிலையின் தேவைக்கேற்ப, அரசமைப்பில் வழங்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி, வளர்ந்து வரும் சமுதாயத்தின் மாறிவரும் தேவைகளுடன் நாட்டின் அடிப்படைச் சட்டம் பேணப்படுவதை உறுதி செய்வதற்கும் நாட்டின் உயரிய நலனில் பல்வேறு சட்டங்களை இயற்றுவதற்கு முன்முயற்சிகள் முன்னேற்றங்களுக்கான செயல்பாடுகளை எடுப்பதற்கும் கருவியாக இருந்துள்ளது.

**துணை சபாநாயகர் பதவி நிரப்பப்படவில்லை!**

அரசியல் அமைப்பு முறையின் மையமாக நாடாளுமன்றத்தை இடம் பெற செய்வது, நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிப்பதற்கு இந்த புகழ்பெற்ற அமைப்பின் மீது மாபெரும் பொறுப்பு சுமத்தப்படுவதையும் குறிக்கிறது. பல ஆண்டுகளாக நமது நாடாளுமன்றம், நமது அரசியல் அமைப்பு முறையின் இயக்க மையமாக கோட்பாட்டு ரீதியிலாகவும் நடைமுறை ரீதியிலாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளதை எவரும் கேள்வி எழுப்ப முடியாது.



மக்களவையின் நடவடிக்கைகள் சுமூகமாக நடைபெறுவதற்கு இன்றியமையாத அரசமைப்பு பதவிகளில் ஒன்றான மக்களவை துணை சபாநாயகர் பதவி தற்போது வரையில் நிரப்பப்படாமல் இருப்பதை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். நாடாளுமன்ற நடவடிக்கைகள் சிறப்பாக நடைபெறுவதை இது பாதிக்கும் என்பதால், அப்பதவியிடம் உடனடியாக நிரப்பப்பட வேண்டும்.

கடந்த 75 ஆண்டுகளில், நமது நாட்டில் மக்களாட்சி முறையை மேம்படுத்துவதற்கு, நமது மக்கள் அவர்களின் முழுமையான திறனையும் பொறுப்புறுதியையும் உலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளனர். அவர்கள் சரியான கால அளவில் செயல்படுத்தியுள்ளனர். அத்துடன், பல்வேறு பலவீனப்படுத்தும் காரணிகள் இருந்தப் போதிலும், அவர்கள் பிரச்சினைகளை களைவதிலும், அவர்களுக்கு பொறுப்புடைமையான அரசியல் வகையை கைக் கொள்வதிலும் அவர்கள் திறன் பெற்றிருக்கின்றனர் என்பதற்காக அவர்களின் அரசியல் கருத்தினை ஏற்றுக் கொண்டதாக கருதப்பட மாட்டாது. அவர்கள் தன்னிகரற்ற செயலறிவுடனும் அசாத்திய மதிநுட்பத்துடனும் அவர்களின் வாக்குகளை செலுத்துவதன் வாயிலாக இதனை மெய்ப்பித்துள்ளனர். அரசாங்கத்தில் அவர்கள் மாற்றங்களை கொண்டு வந்தப் போது இது வெளிப்பட்டது.

**நம்பிக்கை ஈடேறவில்லை!**

இந்தியாவின் தேவைகளுக்கு மிகவும் பொருத்தமானதாகவும், நாட்டு மக்களின் விருப்பங்களை நிறைவேற்ற கூடியதாகவும் உள்ள நாடாளுமன்ற மக்களாட்சி அமைப்பு முறையை, நமது நாட்டின் குடியரசை உருவாக்கிய தலைவர்கள் பின்பற்றினர். மேலும், பெருமளவிலான முரண்பாடுகளுடனும் சமூக ஏற்றத்தாழ்வுகளுடனும். சாதி, மதம், பகுதி, மொழி போன்ற பல்வேறு கூறுகளால் நம் நாடு மிகவும் மோசமாக துண்டாடப்பட்ட நிலையில் இருந்தப் போதிலும், நாடாளுமன்ற மக்களாட்சி அமைப்பு முறை, ஒருங்கிணைந்த சமுதாயத்தையும் வலிமையான நாட்டையும் உருவாக்கும் என்று நமது தலைவர்கள் உறுதியாக நம்பினர். ஆனால், அந்த நம்பிக்கை ஈடேறவில்லை. தற்போதும் அந்த கனவு நனவாகவில்லை. இது வரையில் நாம் அயராது பாடுபட்டு பின்பற்றிய அரசியல் அமைப்பு முறை இன்று பல ஐயப்பாடுகளை எதிர் கொண்டு வருகிறது.

இன்றைக்கு, நமது நாட்டில் நாடாளுமன்ற குடியரசு முறைக்கு மாற்றாக சிறந்த அரசாட்சி முறையேதும் இல்லை என்பதை தெளிவாக உணர்வதற்கான அவசியம் நாடாளுமன்ற முறையைப் பின்பற்றி வருகின்ற ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டுள்ளது. அரசமைப்பின் மக்களாட்சியின் மாண்பினை பேணுவதற்கான கடமையை நமது நாடாளுமன்றமும், மாநிலச் சட்டமன்றங்களும் சிறப்புடன் செயல்படுத்தி வருகின்றன. மேலும் மிக மேன்மையான முறையில் நம்முடைய மக்களாட்சி அமைப்பு சிறப்பாகச் செயல்பட வேண்டும்.

**சுயமரியாதையை உயர்த்திப் பிடிக்கும் தமிழ்நாடு அரசு!**

தமிழ்நாடு அரசு, சுயமரியாதை, சமூக நீதி, சமத்துவம், பகுத்தறிவுச் சிந்தனை மற்றும் பிறர் உளமறிந்து செயல்படுதல் ஆகிய கொள்கைகளை உறுதி செய்கிறது. தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் போன்ற உன்னதத்தலைவர்களின் கொள்கைகளையும் சிந்தனைகளை யும் உயிர்மூச்சாகக் கொண்டு தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஆகியோரின் அடியொற்றி (“திராவிட மாடல்”) திராவிடக் கொள்கையின் வழியில் ஆட்சியை வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சமூக நீதியை உறுதிசெய்கின்ற, பல்வேறு புதுமையான மக்கள் நலன் சார்ந்த திட்டங்களான

1. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்

2. மகளிர் விடியல் பயணம் திட்டம்

3. “முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்.”

4. அனைத்துத் தொழில்முறைப் பாடப்பிரிவுகளிலும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவீத இடஒதுக்கீடு.

5. புதுமைப் பெண் திட்டம் என அழைக்கப்படுகின்ற மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டம்.

6. தமிழ்ப் புதல்வன் திட்டம்

7. நான் முதல்வன் திட்டம்

8. மக்களைத் தேடி மருத்துவம்

9. இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48 திட்டம்

ஆகிய திட்டங்களை சிறப்புற செயல்படுத்தி வருகிறார்.

இன்று, வலுவான உட்கட்டமைப்பாலும் முற்போக்குச் சிந்தனையுடன் கூடிய வளர்ச்சிக் கொள்கைகளாலும் உந்தப்பட்டு, நமது நாட்டின் இரண்டாவது பெரியளவிலான பொருளாதாரத்தைக் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு சிறப்புறத் திகழ்கிறது. பாரம்பரியத்துடன் நவீனத்துவத்தை இசைவான முறையில் ஒன்றிணைத்து மாநிலம், அனைவரையும் உள்ளடக்கிய ஆட்சி நடத்திவருகின்ற நமது வளர்ச்சியின் அடையாளமாக அறியப்படுகிறது.

கடந்த நாற்பதாண்டுகளில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நம் மாநிலத்தின் பங்கு 5.40 சதவீதத்திலிருந்து 9.21 சதவீதமாக அதிகரித்திருப்பது, திராவிட இயக்கக் கொள்கைகளின் வெற்றிக்கு ஒரு சான்றாக அமைகிறது.

இந்த வளர்ச்சியின் பாதையில் தொடர்ந்து முன்னேறும் வகையில், 2030 ஆம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக உருவெடுக்க வேண்டும் என்கிற இலட்சிய இலக்கை நோக்கி நம் மாநிலம் பயணித்து வருகிறது.

நமது மரியாதைக்கும் அன்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சர்

**இலட்சிய இலக்கை நோக்கி தமிழ்நாடு!**

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் இந்த அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து, மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றியிருப்பது மட்டுமின்றி, அவர்களின் எதிர்பார்ப்புகளைத் தாண்டியும் செயலாற்றிவருகிறோம். இந்தக் குறுகிய காலஅளவில் நாம் நிறைவேற்றியுள்ள சாதனைகளையும், ஒன்றிணைந்து நாம் அடைந்துள்ள முன்னேற்றத்தையும் தொடர்ந்து, இன்று மக்களின் முன் பெருமையுடன் நிற்கிறோம். தமிழ்நாட்டு மக்களின் நலனுக்கும் முன்னேற்றத்திற்கும் அர்ப்பணிப்புடன் செயல்படுகின்ற நாம், ‘மாபெரும் தமிழ்க்கனவை’ நனவாக்குவதில் உறுதியாக நிற்கிறோம். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் திராவிடக் கொள்கையின் வழியில் (திராவிட மாதிரி) “ ஆட்சியை அளித்து வருகின்ற தமிழ்நாடு அரசு, முழு நாட்டிற்கும் சமூக நீதி, சமூக நல்லிணக்கம் மற்றும் பகுத்தறிவுச் சிந்தனை ஆகியவற்றுடன் மக்களாட்சி கருத்தியல்புகளின் கலங்கரை விளக்கமாகத் தமிழ்நாடு தொடர்ந்து வருவதை உறுதி செய்யும். நாட்டிலுள்ள பிற மாநிலங்களுக்கு மட்டுமின்றி, ஒட்டுமொத்த தெற்காசியப் பகுதிக்கும், தமிழ்நாட்டை ஒரு முன்மாதிரி மாநிலமாக மாற்றுவதற்கு இந்த அரசு அயராது உழைத்து வருகிறது.

**நம்பகத் தன்மையை நாம் மீட்டெடுக்க வேண்டும்!**

மக்களாட்சியின் செயற்பாடுகளுடன் தொடர்புடைய ஒவ்வொருவரும், விருப்பு வெறுப்பின்றி மக்களாட்சி உணர்வை வெளிப்படுத்தாத வரையில், மக்களாட்சி நிலைத்திருக்க முடியாது. நமது நாட்டின் விவகாரங்களை நிருவகிக்கின்ற தலைமை, நமது நாடாளுமன்றத்திலிருந்துதான் உருவாகிறது. மக்களின் நன்மைக்கும், நாடாளுமன்ற அமைப்புமுறையின் நலனுக்கும் பொறுப்புறுதி ஏற்கின்ற நபர்கள் நாடாளுமன்றத்தில் நுழைந்து, அதன் அதிகாரவரம்பெல்லைக்குள் தெளிவாக முடிவெடுக்கின்ற நிலை தொடர்ந்தால் மட்டுமே, மக்களுக்கான இந்த அமைப்புமுறை மீதான நம்பகத்தன்மையை நாம் மீட்டெடுக்க இயலும்.

பொது வாழ்வில் ஈடுபட்டுள்ளவர்கள், அதிகாரத்தில் உள்ளவர்கள், குறிப்பாக நாடாளுமன்ற மற்றும் மாநில சட்டமன்ற உறுப்பினர்கள், அந்த அதிகாரத்தை மக்களின் நலனுக்கான பயன்படுத்துவதே மக்களாட்சியின் சாராம்சமாகும். குடிமக்கள், தங்களை மக்களாட்சி அமைப்புகளுடன் அடையாளப்படுத்திக் கொள்ளவும், மேலும் அவர்களுக்கு சேவை செய்வதற்காகவே அந்த அமைப்புகள் உள்ளதென கருதவும், இறுதியாக மக்களாட்சி அமைப்புகளுக்கு பொறுப்பானவர்களும் இவர்கள் தான் என்பதை உணர முடிவதும் மட்டுமே மக்களாட்சியை நீண்ட கால நோக்கில் வலுப்படுத்த இயலும். சாமானிய மனிதனின் எண்ணங்களையும், உணர்வுகளையும் நாம் புறக்கணிக்க இயலாது.

மக்களாட்சி அமைப்புகளின் அங்கமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் குடிமக்களாக, வாக்காளர்களாக, மக்கள் பிரதிநிதிகளாக, தலைவர்களாக, நிர்வாகிகளாக, சட்டங்களை விளக்கியுரைப்பவர்களாக, அறிஞர்களாக, குடிமைச் சமூக ஆர்வலர்களாக, வழக்காடும் குழுக்களாக மற்றும் சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினராகவும் செயல்பட்டு இந்த அமைப்பை இயன்ற அனைத்து வழிகளிலும் வலுப்படுத்துவதற்கு முயற்சி மேற்கொள்ள வேண்டும். அரசு நிறுவனங்களுக்கு இடையே ஓர் இணக்கமான உறவு நிலவுவதை நாம் அங்கீகரிக்கவேண்டும். ஓர்அமைப்பை பலவீனப்படுத்த செய்யக்கூடிய எந்த செயலும், ஒட்டுமொத்த அமைப்பிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது தெளிவு.

**பேரறிஞர் அண்ணா சட்ட கொள்கைகள்!**

இறுதியாக, நம்முடைய மாபெரும் தலைவர், பேரறிஞர் அண்ணா என்று அன்புடன் அழைக்கப்படுபவரும், தி.மு.க.வின் நிறுவனரும், கட்சியின் சிற்பியுமான சி.என்.அண்ணாதுரை அவர்களின் உயிர்ப்புள்ள கொள்கையான “மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி” என்ற கொள்கையை மாண்பமை கூட்டத்தின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். அண்ணா அவர்கள் கட்டமைத்த கொள்கைகளை நம் அன்பிற்குரிய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தவறாது கடைபிடித்து வந்ததுடன், அவற்றை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்றும் பின்பற்றி வருகிறார் என்பதும் சிறப்புக்குரிய ஒன்றாகும்.

**அண்ணாவின் சொல் என்றும் நிலைக்கும்!**

தி.மு.க.வின் நிறுவனத் தந்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் மாநிலங்களவையில் தன்னுடைய முதல் உரையில் மேற்கண்ட கொள்கையை வலியுறுத்தி கூறிய கருத்துக்கள், முன்னெப்போதையும்விட இன்றைய கால கட்டத்திற்கு மிகவும் பொருத்தமானதாக இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஆளும் கட்சி, பணிவுடனும், பெருந்தன்மையுடனும், மக்களாட்சி சார்புடனும் செயல்பட கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

ஒரு கட்சி தொடர்ச்சியாக பலமுறை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு தொடர்ந்து ஆட்சியில் உள்ளபோது, தாங்கள் எதைச் சொன்னாலும் சரி, எதைச் செய்தாலும் சரி என்ற மனப்போக்கில் இருப்பதும், சிறிய கட்சிகளுக்கு தமது உரிமைகள் மற்றும் தனிச் சிறப்புரிமைகள் குறித்து வினா எழுப்ப உரிமையில்லை என்று எண்ணுவதும் கூடாது.

அத்தகைய ஏகாதிபத்திய/தனி வல்லாண்மைப் போக்கு சிந்தனை குறித்து, ஆட்சியில் வீற்றிருக்கும் கட்சியின் மனநிலையில் மாற்றம் ஏற்படாதவரை, நாட்டைப் பாதுகாப்பாகவும், வளமாகவும், வளர்ச்சி அடையவும் செய்வது சாத்தியமற்றதாகும்.

**திராவிடன் என்பதில் பெருமை கொள்கிறேன்!**

பேரறிஞர் அண்ணா அவர்கள், மாநிலங்களவையில் முழங்கிய கருத்துகளை அவருடைய சொற்களிலேயே மீண்டும் ஒரு முறை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விழைகிறேன். “நான் திராவிட இனத்தைச் சேர்ந்தவன். என்னை திராவிடன் என்று அழைத்துக் கொள்வதில் நான் பெருமிதம் கொள்கிறேன். இவ்வாறு கூறுவதால், நான் வங்க மொழி பேசுபவர்களுக்கோ, மாராட்டிய மொழி பேசுபவருக்கோ, குஜராத்தி மொழி பேசுபவருக்கோ எதிரானவன் என்பது பொருளல்ல. ராபர்ட் பர்ன்ஸ் கூறியதுபோல், “எல்லாவற்றிற்கும் மேலாக மனிதன் என்பவன் மனிதன்தான்”. ஏனென்றால், திராவிடர்கள், இந்த நாட்டிற்கு ஒருவகையில், உறுதியான, தனிச்சிறப்புள்ள, வித்தியாசமான பங்களிப்பை பெருமளவில் வழங்க இயலும் என்று கருதுவதால், நான் என்னை திராவிட இனத்தைச் சேர்ந்தவன் என்று அழைத்துக் கொள்கிறேன். அதனால், எங்களுக்கு சுயமாக முடிவு செய்யும் உரிமை வேண்டும் என்று விரும்புகிறோம்.

**சுயமாக முடிவு செய்யும் உரிமை வேண்டும்!**

சுயமாக முடிவு செய்யும் உரிமை, ஒவ்வொரு மாநிலத்தையும் ஒரு சிறிய நாடாகவும், நெருங்கி ஒற்றுமையுடன் வாழும் ஓரினமாகவும் மாற்றும். இதனால், அப்பகுதியில் வாழும் மக்கள், பொதுவான சமூக விருப்ப உணர்வைக் கொண்டிருப்பர். மேலும், பொருளாதார மீளாக்கம் சிறப்பாக அமைவதுடன் சமூக மீளாக்கமும் மிகுந்த நன்மை பயப்பதாக அமையும்.

அரசமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள நோக்கத்தையும், குறிக்கோளையும் எய்தும் வகையில் நமது அரசமைப்பின் மாண்புகளை வலுப்படுத்தும் பொருட்டு பின்வரும் கருத்துடன் எனது உரையை நான் நிறைவு செய்ய விழைகிறேன். சுயமாக முடிவு செய்யும் உரிமையுடன் மத்தியில் கூட்டாட்சி அமைத்தல், மாநிலங்களுடன் சுமூகமான உறவைக் கொண்டிருத்தல், பொருளாதாரம், கல்வி, ஆகியவற்றில் மாநிலங்களின் ஒத்த வளர்ச்சி, மாநிலங்களின் கலாச்சாரங்களுக்கு இடையேயான சிறப்பான புரிதல், நாட்டின் ஒருங்கிணைந்த வளர்ச்சி ஆகியவற்றை ஏற்படுத்தவும், அனைத்திற்கும் மேலாக நமது நாட்டின் பெருமையையும், “வேற்றுமையில் ஒற்றுமை” என்பதன் வெற்றியை உலகிற்குப் பறைசாற்றுவதற்கும் மாநிலத்திற்கு சுயாட்சி வழங்குவது குறித்து நாம் தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டும்.

இவ்வாறு கு.பிச்சாண்டி உரையாற்றினார்.